**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்**
**அ.வ.எண். 155/2022**

பெயர் : கவிதா
சாட்சி – வா.சா–1 நாள்:08.04.2026

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதி தரப்பு)**

1. க.ச.345/13 காலையில் சுப்பிரமணியத்திற்கு விற்பனை செய்தது போக மீதம் உள்ள 3 செண்ட் பூமிக்கு குறிப்பிட்ட செக்குபந்தி இல்லாமல் பொதுவாக தான் உள்ளது என்றால் சரிதான். க.ச.345/13 காலையில் மொத்தம் 10 செண்ட் பாகம் பிரிக்காமல் பொதுவில் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 10 செண்ட் பூமி இந்த வழக்கின் சொத்து விவரத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி 10 செண்ட் பூமி பொறுத்து எந்த பாகப்பிரிவினை பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான்.

2. மேற்படி 10 செண்ட் பூமியில் பிரதிவாதி 1990ம் ஆண்டிலேயே குடோன் கட்டியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி குடோனுக்கான 5 HP மின் மோட்டார் மற்றும் மின் இணைப்பு எனது கணவர் மற்றும் குமாரசாமி ஆகியோருக்கு கூட்டாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி 10 செண்டில் எங்களுக்கு பாத்தியப்பட்ட 3 செண்ட் தவிற தாவா சொத்துக்களில் எவ்விதமான உரிமையும் எங்களுக்கு கிடையாது என்றால் சரியல்ல.

3. எனது கணவர் நல்ல மனநிலை மற்றும் உடல்நிலையில் தான் பிரதிவாதி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றும், எனவே மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. எனது கணவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதை காண்பிப்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்திருந்தால் அது சம்மந்தமான ஆவணங்களை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றும், அவர் நல்ல நிலையில் இருந்ததால் தான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. தாவா சொத்திற்கு உண்டான வருவாய் ஆவணங்களை கடந்த 2022ம் ஆண்டிலேயே பிரதிவாதி பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி பெயருக்கு பெயர் மாற்றம் செய்ததே எனக்கு தெரியாது. நான் சொல்வது தவறு என்றும், பிரதிவாதி பெயருக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தது பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும் வழக்கிற்காக எனக்கு தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. மேற்படி தான செட்டில்மெண்ட் எழுதி வைத்த பின்னர் எனது கணவர் 4 மாத காலம் கழித்து தான் இறந்தார் என்றால் சரிதான். எனது கணவர் உயிருடன் இருந்த வரை மேற்படி தான செட்டில்மெண்ட் பற்றி கேள்வி எழுப்பாமல் இருந்து விட்டு தற்போது பிரதிவாதியை துன்புறுத்த வேண்டும் என்பதற்காக நான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் உயிருடன் இருந்த போதே மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைபடுத்தப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.

6. பிரதிவாதி தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்றுக்கொண்டு சொத்தின் முழு உரிமையாளராக அதனை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினையின் படி எனது கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அவர் எழுதிவைப்பதற்கு அவருக்கு முழு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. சொத்தினை தான செட்டில்மெண்ட் எழுதி வைப்பதற்கு எனது கணவருக்கு முழு உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

7. தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பூரிவீக அடிப்படையிலோ கூட்டுக்குடும்ப அடிப்படையிலோ பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கான வழக்கு மூலமே எழவில்லை, நீதிமன்ற கட்டணம் தவறாக மதிப்பீடு செய்து செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

(sd/– V.Kalidasan)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.